தினத்தந்தி

# புதுவை



### மகாத்மா காந்தி மருத்துவமனையில்

# கொரோனா தடுப்பூசி 3-ம் கட்ட பரிசோதனை

பாகூர், டிச. 4-

கிருமாம்பாக்கம் பிள்ளையார்குப்பம் ஸ்ரீபாலாஜி வித்யாபீத் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் மகாத்மா காந்தி மருத்துவமனைக்கு கொரோனா தடுப்பூசி 3-ம் கட்ட பரிசோதனைக்கு இந்திய மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி அளித்துள்ளது.

மருத்துவமனை வளாகத்தில் நடந்த இதன் தொடக்க நிகழ்ச்சிக்கு ஸ்ரீபாலாஜி வித்யா பீடம் பல்கலைக்கழக துணைவேந்தர் சுபாஷ் சந்திரபரிதா தலைமை தாங்கினார். பல்கலைக்கழகத் துணைத்தலைவர் எஸ்.ஆர்.ராவ், மருத்துவ கண்காணிப்பாளர் நிர்மல்குமார், நுரையீரல் மருத்துவத்துறை தலைவர் டாக்டர் பழனிவேல், பொது மருத்துவத் துறை தலைவர் டாக்டர் லோகேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சியை தொடங்கி வைத்த அமைச்சர் கந்தசாமி தடுப்பூசி விவரங்களை கேட்டறிந்தார். அனந்தராமன் எம்.எல்.ஏ., சுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர் மோகன் குமார் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

கொரோனா தடுப்பூசி பரிசோதனைக்கு உடல் ஆரோக்கியமான 18 வயதுக்கு மேல் உள்ளவர்கள் பங்கேற்கலாம். சர்க்கரை, ரத்த கொதிப்பு போன்ற பாதிப்புக்குள்ளானவர்களும் இந்த தடுப்பூசியை போட்டுக்கொள்ளலாம். தொற்று பாதிக்காதவர்களுக்கு இந்த தடுப்பூசி போடப்படுகிறது. 1,200 தன்னார்வலர்களுக்கு தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளது என்று கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

DINATHANTHI DT 4/Dec/2020

புதுச்சேரி மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரியில்

# கரோனா தடுப்பூசி மூன்றாம் கட்ட பரிசோதனை

• 1,200 தன்னார்வலர்களிடம் நடத்த முடிவு

■ புதுச்சேரி

புதுச்சேரி ஸ்ரீபாலாஜி வித்யா பீத் நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் ஓர் அங்கமான மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு கரோனா தடுப்பூசி மூன்றாம் கட்ட களபரிசோதனைக்கு இந்திய மருத்துவக் கட்டுப்பாட்டாளரிடமிருந்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதையடுத்து இப்பணி நேற்று தொடங்கியது.

இதுதொடர்பாக ஸ்ரீ பாலாஜி வித்யாபீத் துணைத் தலைவர் டாக்டர் எஸ்.ஆர்.ராவ் கூறுகையில், "இச்சோதனைக்காக இந்தியாவில் தேர்வான 21 மையங்களில் இக்கல்லூரியும் ஒன்று. கரோனா தடுப்பூசியின் மூன்றாம் கட்ட கள பரிசோதனையானது இந்தியாவில் மொத்தம் 28 ஆயிரம் ஆர்வலர்களிடம் நடத்தப்பட உள்ளது.

இந்தத் தடுப்பூசியை இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகமும், பாரத் பயோடெக் நிறுவனமும் இணைந்து உருவாக்கி உள்ளன. இந்த களப்பரிசோதனைக்கான அனுமதி, இந்திய மருத்துவக் கட்டுப்பாட்டாளரிடம் இருந்து மகாத்மாகாந்தி மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

கரோனா தடுப்பூசியின் செயல் திறன் மற்றும் பாதுகாப்பை கண்டறிய மூன்றாம் கட்ட சோதனையானது புதுச்சேரி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மொத்தம் 1,200 தன்னார்வலர்களிடம் நடத்தப்பட உள்ளது" என்று குறிப்பிட்டார். இப்பரிசோதனையானது மகாத்மா காந்தி மருத்துவமனையின் நுரையீரல் மருத்துவத்துறை தலைவர் டாக்டர் பழனிவேல் மற்றும் பொது மருத்துவத்துறை தலைவர் டாக்டர் லோகேஷ் தலைமையில் நடத்தப்பட உள்ளது. மூன்றாம்கட்ட ஆராய்ச்சிக்கு ஆர்வமுள்ளோர் பெயர்களை பதிவு செய்யலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.



▶▶ மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்துக்கு கரோனா தடுப்பூசி மூன்றாம் கட்ட பரிசோதனைக்கு அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் துவங்கின.

பரிசோதனை தொடர்பாக நுரையீரல் மருத்துவத்துறை தலைவர் டாக்டர் பழனிவேல் கூறுகையில், "18 வயதுக்கு மேற்பட்டோர் இந்த ஆய்வில் பங்கேற்கலாம். இந்த தடுப்பூசி இருமுறை செலுத்தப்படும். தடுப்பூசி செலுத்தி 28 நாட்கள் கழித்து இரண்டாவது முறை செலுத்துவோம். தடுப்பூசி போட்டுக்கொண்டோரை ஓராண்டு கண்காணிப்போம். இப்பணியை இரு மாத கால அளவில் நிறைவு செய்வோம்" என்று குறிப்பிட்டார்.

முன்னுதாரணமாக முதலில் தடுப்பூசிபோட்டுக்கொண்ட மருத்துவமனை பொது மேலாளர் ஆஷா கூறுகையில், "கரோனாவிலிருந்து மீள தடுப்பூசி அவசியம்" என்றார். மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் நிர்மல் கூறுகையில், "ஆய்வுக்கு புதுச்சேரி சுகாதாரத்துறை இயக்குநர் ஒப்புதல் அளித்துள்ளார். அனைத்து நெறிமுறைகளும் முழுமையாக கடைபிடிக்கப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார். •

சென்னை. காஞ்சிபுரம். புதுவை. வேலூர். கோவை. திருப்பூர். சேலம் தருமபுரி. திருச்சி. தஞ்சாவூர். மதுரை. ராமநாதபுரம். நெல்லை.
behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist., Pin: 6032

HINDU - TAMIL DT 4/Dec/2020

# மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரியில் கொரோனா தடுப்பூசி 3ம் கட்ட பரிசோதனை



■ பிள்ளையார்குப்பம் மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரியில் கொரோனா தடுப்பூசி பரிசோதனையை அமைச்சர் கந்தசாமி தொடங்கி வைத்தார். அருகில் அரசு கொறடா அனந்தராமன், ஸ்ரீ பாலாஜி வித்யாபீடம் பல்கலைக்கழக துணைவேந்தர் சுபாஷ் சந்திரபரிதா, துணைத் தலைவர் ராவ், மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரி மருத்துவ கண்காணிப்பாளர் நிர்மல்குமார், நுரையீரல் மருத்துவத் துறை தலைவர் பழனிவேல், பொது மருத்துவத் துறை தலைவர் லோகேஷ்.

**பாகூர், டிச. 4**

மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரியில் கொரோனா தடுப்பூசி பரிசோதனையை அமைச்சர் கந்தசாமி தொடங்கி வைத்தார்.

பிள்ளையார்குப்பத்தில் உள்ள ஸ்ரீ பாலாஜி வித்யாபீத் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், கொரோனா தடுப்பூசி (கோவேக்சின்) 3ம் கட்ட பரிசோதனையை மேற்கொள்ள, இந்திய மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த தடுப்பூசியை இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகமும் பாரத் பயோடெக் நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ளன. மருத்துவக் கல்லூரியில், கொரோனா தடுப்பூசி பரிசோதனையை அமைச்சர் கந்தசாமி துவக்கி வைத்தார். தடுப்பூசி குறித்த விவரங்களை மருத்துவ அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

நிகழ்ச்சிக்கு ஸ்ரீ பாலாஜி வித்யாபீடம் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் சுபாஷ் சந்திரபரிதா தலைமை தாங்கினார். துணைத் தலைவர் ராவ், மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரி மருத்துவ கண்காணிப்பாளர் நிர்மல்குமார், நுரையீரல் மருத்துவத் துறை தலைவர் பழனிவேல், பொது மருத்துவத் துறை தலைவர் லோகேஷ் முன்னிலை வகித்தனர்.

அரசு கொறடா அனந்தராமன், சுகாதாரத்துறை இயக்குனர் மோகன்குமார் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

கோவேக்சின் தடுப்பூசி பரிசோதனையில், உடல் ஆரோக்கியமாக உள்ள 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் பங்கேற்கலாம். சர்க்கரை நோய். ரத்த கொதிப்பு போன்ற நோய்கள் அதிகம் பாதிக்காதவர்கள் போட்டுக் கொள்ளலாம். குறிப்பாக கொரோனா தோற்று பாதித்தவர்களுக்கு கோவேக்சின் தடுப்பூசி போடப்படுகிறது என கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

DINAMALAR DT 4|Dec|2020

# மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரியில் கொரோனா தடுப்பூசி 3ம் கட்ட பரிசோதனை



பிள்ளையார்குப்பம் மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரியில் கொரோனா தடுப்பூசி பரிசோதனையை அமைச்சர் கந்தசாமி தொடங்கி வைத்தார்.அருகில் அரசு கொறடா அனந்தராமன், ஸ்ரீ பாலாஜி வித்யாபீடம் பல்கலைக்கழக துணைவேந்தர் சுபாஷ் சந்திரபரிதா, துணைத் தலைவர் ராவ், மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரி மருத்துவ கண்காணிப்பாளர் நிர்மல்குமார், நுரையீரல் மருத்துவத் துறை தலைவர் பழனிவேல், பொது மருத்துவத் துறை தலைவர் லோகேஷ்.

**பாகூர், டிச. 4**

மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரியில் கொரோனா தடுப்பூசி பரிசோதனையை அமைச்சர் கந்தசாமி தொடங்கி வைத்தார்.

பிள்ளையார்குப்பத்தில் உள்ள ஸ்ரீ பாலாஜி வித்யாபீத் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில், கொரோனா தடுப்பூசி (கோவேக்சின்) 3ம் கட்ட பரிசோதனையை மேற்கொள்ள, இந்திய மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த தடுப்பூசியை இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகமும் பாரத் பயோடெக் நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ளன. மருத்துவக் கல்லூரியில், கொரோனா தடுப்பூசி பரிசோதனையை அமைச்சர் கந்தசாமி துவக்கி வைத்தார். தடுப்பூசி குறித்த விவரங்களை மருத்துவ அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

நிகழ்ச்சிக்கு ஸ்ரீ பாலாஜி வித்யாபீடம் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் சுபாஷ் சந்திரபரிதா தலைமை தாங்கினார். துணைத் தலைவர் ராவ், மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரி மருத்துவ கண்காணிப்பாளர் நிர்மல்குமார், நுரையீரல் மருத்துவத் துறை தலைவர் பழனிவேல், பொது மருத்துவத் துறை தலைவர் லோகேஷ் முன்னிலை வகித்தனர்.

அரசு கொறடா அனந்தராமன், சுகாதாரத்துறை இயக்குனர் மோகன்குமார் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

கோவேக்சின் தடுப்பூசி பரிசோதனையில், உடல் ஆரோக்கியமாக உள்ள 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் பங்கேற்கலாம். சர்க்கரை நோய். ரத்த கொதிப்பு போன்ற நோய்கள் அதிகம் பாதிக்காதவர்கள் போட்டுக் கொள்ளலாம். குறிப்பாக கொரோனா தோற்று பாதித்தவர்களுக்கு கோவேக்சின் தடுப்பூசி போடப்படுகிறது என கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

DINAMALAR DT 4|Dec|2020



கொரோனா தடுப்பூசி பரிசோதனை நிகழ்ச்சியை அமைச்சர் கந்தசாமி தொடங்கி வைத்த காட்சி.

### மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரியில்

# கொரோனா தடுப்பூசி பரிசோதனை

## அமைச்சர் கந்தசாமி தொடங்கி வைத்தார்

பாகூர், டிச. 3-

புதுவை அருகே பிள்ளையார்குப்பத்தில் ஸ்ரீ பாலாஜி வித்யாபீத் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரி மற்றும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் உள்ளது.

**கொரோனா தடுப்பூசிக்கு அனுமதி**

அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு கொரோனா தடுப்பூசி 3-ம் கட்ட பரிசோதனைக்கு இந்திய மருந்துகள் கட்டுப்பாட்டு அமைப்பு அனுமதி வழங்கியுள்ளது.

இந்த தடுப்பூசியை இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகமும் பாரத் பயோடெக் கம்பெனியும் இணைந்து உருவாக்கியுள்ளது.

**கந்தசாமி தொடங்கி வைத்தார்**

மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரியில் நடந்த தடுப்பூசி பரிசோதனையை அமைச்சர் கந்தசாமி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்து தொடங்கி வைத்தார். பின்னர் இந்த தடுப்பூசி குறித்து விவரங்களை அங்கிருந்த மருத்துவ அதிகாரிகளிடம் கேட்டு தெரிந்து கொண்டார். இந்த நிகழ்ச்சிக்கு ஸ்ரீ பாலாஜி வித்யாபீடம் பல்கலைக்கழக துணைவேந்தர் டாக்டர் சுபாஷ் சந்திரபரிதா தலைமை தாங்கினார். பல்கலைக்கழகத் துணைத் தலைவர் டாக்டர் எஸ்.ஆர். ராவ், மகாத்மா காந்தி மருத்துவ கல்லூரி மருத்துவ நிர்மல்குமார், நுரையீரல் மருத்துவத் துறை தலைவர் டாக்டர் பழனிவேல், பொது மருத்துவத் துறை தலைவர் டாக்டர் லோகேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அனந்தராமன் எம்.எல்.ஏ., புதுவை அரசு சுகாதாரத்துறை இயக்குனர் டாக்டர் மோகன்குமார் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

இந்த பரிசோதனைக்கு உடல் ஆரோக்கியமாக உள்ள 18 வயதுக்கு மேல் உள்ளவர்கள் இதில் பங்கேற்கலாம். மேலும் சர்க்கரை வியாதி, ரத்த கொதிப்பு போன்ற நோய்கள் அதிகம் பாதிக்காதவர்கள் போட்டுக் கொள்ளலாம்.

குறிப்பாக இந்த கொரோனா தொற்று பாதிக்காத வர்களுக்கு இந்த தடுப்பூசி போடப்படுகிறது என கல்லூரி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

MALAI MALAR DT 3|Dec|2020